# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No.254/2015**

Deposition of <u>**D.W.1**</u> witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Menaka, Gr. III Bench Clerk of this court, on 06.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வராஜ் Father Name : நாராயணன்

துவக்க நேரம் :03.47 P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதி மொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் ஆமாம். வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பு குறித்து என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. சட்ட அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியான சங்கதிகள் என்பதால்தான் நான் அதற்கு மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை

என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள ச.எண். 166/12 என்றால் சரிதான். ச.எண்.166/12-ற்கு கிழக்கில் ச.எண்.166/13 உள்ளது என்றால் சரிதான். ச.எண்.166/13-ல் உள்ள சொத்து எனது மனைவிக்கு சொந்தமான சொத்து என்றால் சரியல்ல, அது பொது வீதியாகும்.

3. ச.எண்.166/8 ல் உள்ள சொத்து கோவில் நிலம் என்றால் சரிதான். ச.எண்.166/8-ற்கு கிழக்கே என்ன ச.எண் உள்ளது என்றால் தெரியாது. ச.எண்.166/8-ற்கு தெற்கில் எந்த சர்வே எண் உள்ளது என்றால் தெரியாது. நான் இந்த வழக்கு சம்மந்தமாக மாதிரி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் மாதிரி வரைபடம் தாக்கல் செய்தால் உண்மை தெரிய வந்துவிடும் என்பதால் நான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. வாதிக்கு சொந்தமான ச.எண்.166/12-ல் உள்ள சொத்தில் நான் எந்த பாரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். இந்த ச.எண்.166/12-ல் நான் ஏதேனும் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதை வாதிக்கு திருப்பி கொடுக்க எனக்கு சம்மதமா என்றால் நான் வாதிக்கு சொந்தமான சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை, நான் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதை திருப்பி கொடுக்க தயாராக உள்ளேன்.

5. எனது மனைவிக்கு சொந்தமான வீட்டின் மேல்புறத்தில் மேற்கில் உள்ள ஸ்லாப் வாதிக்கு சொந்தமான இடத்தில் நீட்டிக்கட்டப்பட்டுள்ளது என்றாலும், அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஸ்லாப்பை நான் எடுக்க தயாராக உள்ளேன் என்றாலும் சரியல்ல, அப்படி எந்த ஸ்லாப்பும் வாதிக்கு சொந்தமான இடத்தில் நீட்டப்பட்டு கட்டப்படவில்லை, அப்படி இருந்தால் அதை எடுத்துவிடுகிறேன். அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

Typted by Tmt.L.Kalaiselvi, O.S. No.254/2015, Dt.06.03.2025.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடிக்கப்பட்டுவிட்டது.

முடிவு நேரம்: 04.04 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typted by Tmt.L.Kalaiselvi, O.S. No.254/2015, Dt.06.03.2025.